Registered No. M. 1014.

உ

ஸ்ரீ வாணீசகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்

மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல்.

வீடுபேறில்.

வெண்டாமரை உ.	1914-ம் ஆ டிசம்பர் மீ	இதழ் கஉ.

பத்திராதிபர் :— சி. பாகாருப் பத்தர்,

கல்வே காலேஜ் தமிழ்ப் பண்டிதர்

புதுவை.

வருஷ சந்தா ரூ 1	மாதிரிகாட்டுக்கு ரூ 2
தபாற்கூலி அணா 4	தனி சஞ்சிகை அணா 2

Saigon Sinnaya Press, Pondicherry.

உள்ளுறை.

பக்கம்.

யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சரித்திரம்: — ஸ்ரீ தி. வடிவேலு முதலியார்.... ... 267

ரமணி: — ஸ்ரீ சு. அ. சுப்பராயப்பிள்ளை, புதுவை. ... 270

பாலசிக்ஷை:—ஸ்ரீமதி த. பு. அம்மணியம்மாள் B. I., புதுவை 276

பிரகிருதி சாஸ்திரம்: — பாரதி பக்தன். 279

ஆனந்த முரசு: — ஸ்ரீ M. V. சுப்ரமண்ய ஐயர். ... 281

யாக்கை நிலையாமையும், அதனை லெய்தவேண்டிய பயனும்:—ஸ்ரீ I. L. திருஞானசம்பந்தன். 282

கலைமகள் தோத்திர மஞ்சரி:—ஸ்ரீ வ. விநாயகர் தம்பிபத்தர். 284

குருபக்தி: — ஸ்ரீ M. V. சுப்ரமண்ய ஐயர். 286

மானுஷ்ய ஜன்ம பரம புருஷார்த்தம்:—ஸ்ரீ S. நடேசதேசிகர். 287

கலைமகள் கழகத்திற்கு ஓர் நன்கொடை: — ஸ்ரீ தி. திருப்புளிசாமி ஐயர், புதுவை... 290

சமாசாரம். 290

சந்தாநேயர்களுக்கு அறிவிப்பு.

இம்மாதத்தோடு சந்தாத் தொகை முடிவுகப்பெற்ற சந்தாநேயர்கள், வழக்கம்போல் பத்திரிகை யனுப்பிக்கொண்டு வருகற்குத் தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிப்பதுந் தவிர, தயை செய்து 1915-ம் வருடத்துத் தங்கள் சந்தாத் தொகையை உடனே யனுப்பிவிடுமாறு பிரார்த்திக்கப்படுகின்றார்கள்.

பத்திரிகை வேண்டாத நேயர்கள் வீண்செலவிற்கும் நஷ்டத்திற்கும் நம்மை உட்படுத்தாமல் முன்னதாகவே தெரிவித்து விட்டால் அதையே ஓர் பேருபகாரமாகக்கொள்ளுவோம்.

சந்தாத் தொகையை யனுப்பாத வெளியூர்ச் சந்தாநேயர்களுக்கு, பிப்ரவரிமாதத்துச் சஞ்சிகை வி. பி. மூலமாய் அனுப்பப்படும். வழக்கம்போல் அதை அங்கீகரித்துக் கலைமகளை ஆதரிக்கக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

பத்திராதிபர்.

556



யாழ்ப்பாணத்து நல்லூர்

ஸ்ரீ ஆறுமுகநாவலர்.

557

உ

ஸ்ரீவாணீசகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்

மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல். வீடுபேறநில்.

வெண்டாமரை உ.] 1914-ம் ஆ டிசம்பர் மீ [இதழ் கூ.

இலௌகிகப் பகுதி.

யாழ்ப்பாணத்து நல்லூர்
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சரித்திரம்.

தேனே கனியோ வெனவே சுவைக்குஞ் செழுந்தமிழிற்
றானே தனக்கிணை யாகி யுதித்துயர் சற்குருவாய்
வானோர் புகழ்நல்லை வந்தரு ணவலன் வான்புகழை
நானே சொலவலன் சேடனுங் கூறிட நாணுவனே.

அலைகடல் புடைசூழ் இந் நிலவுலகிற்றோன்றி அழியாப் புகழ் நிறுவி மறைந்த புலவர்கள் பல் பெருங்கோடியெனினும், சமீபகாலத் திற்கு முன்னிருந்த பண்டைக்கால நூற்களில் பின்னோரால் பிழைபட் டுப் பிரயோசனமற்றிருந்தவைகளைப் பிழையின்றித் திருத்தி அச்சிட்டும், கிறிஸ்து மார்க்க உபதேசத்தால் உண்மை யாசாரங்களை விடுத்த பலருக்கு நற்புத்தி புகட்டுவான் கருதி ,அரிய பல நூற்களை எழுதி வெளிப்படுத்தி யும், சைவ சமயத்தின் உண்மைக் கருத்துகளை எவரு மூணரும் வண் ணம் புத்தக மூலமாகவும் பிரசங்க மூலமாகவும் உபதேசித்துப் பலரை

நல்வழிக்குக் கொணர்ந்த பேருபகாரியாய நம்புலவர் பெருமானின் சரிதங் கூறுவது முற்கூறியாங்கு இயலாத காரியமெனினும் அறிந்தவரை சுருக்கிக் கூறுவாம்.

யாழ்ப்பாணத்து நல்லூரில் கார்காத்த வேளாண் மரபிலே பாண்டி மழவர் குடியிலே தோன்றிய கந்தப்பிள்ளை, சிவகாமியம்மையார் என்ப வர்களின் தவப்பயனுய், சென்ற சாலிவாகன சகாப்தம் 1745 சித்திர பானு வரு மார்கழி மீ 5-ம் உ (18-12-1822) புதவாரம் இரவு 10 நாழி கைக்குச் சிம்ம லக்கினம் அவிட்ட நக்ஷத்திரங்கூடிய சுபவோரையில் ஆருவது புத்திரராகப் பிறந்தனர். வயது 5 ஆனவுடன் வித்தியா ரம்பம் செய்யப்பெற்றுச் சுப்பிரமணிய உபாத்தியாயரிடத்துச் சில காலமும், வேலாயுத முதலியாரிடத்து ஷெியார் புதல்வர் சம்பந்தப் புலவ ருடன்கூடிச் சிலகாலமும், பார்சிவல் பாதிரியின் கலாசாலையில் ஆங்கிலம் சிலகாலமும் பயின்றுரெனினும், சரவணமுத்துப் புலவரென்பாரே இவ ருக்கு இலக்கண விலக்கியம் பயிற்றுவித்த பேராசிரியராம். வயது பத்தொன்பது ஆகலும் இவரது கல்வித் திறத்தைக் கேள்வியுற்ற பீற்றர் பார்சிவல் பாதிரியார் இவரைத் தமக்குத் தமிழ் ஆசிரியராக வைத்துக் கொண்டு பைபிளை இவருதவிகொண்டு திருத்தி அச்சிட்டனர். அது கண்ட அக்காலத்துச் சென்னைத் தமிழ் வித்துவான் மகாலிங்க ஐயரும் இவரின் தமிழ் நடைக்கு மிக வியந்தனராம். வயது இருபானிரண்டாகலும் தன்னுடன் பயின்ற சின்னப்பா, நில்லைநாதன் என்னு மிரு மாண வரும் கிறிஸ்து மார்க்கத்திற் புகுவதை யுணர்ந்து, அவ்வாறு செய்தல் தவ றெனச் சைவ சமயத்தின் உண்மைகளைப் போதித்துத் தடுத்துவிட்டனர். அஃதறிந்த பாதிரியார் இவரை விளித்து வினவ, மனப்பூர்வமாகத் தவறான காரியங்கட்கு இடந்தரமாட்டேனென்றும் தமக்குள்ள உத்தியோகம் வேண்டுவதில்லையென்றும் கூறி நின்றுவிட்டனர். மீட்டும் துரையவர்கள் பலரைக்கொண்டு சொல்லுவித்து அவரைப் போதகாசிரியராக அமர்த் தினர். வயது 25-ல் வண்ணார்பண்ணை வசந்த மண்டபத்து ஓர் சபை ஏற்படுத்தி, சைவ சமயத்தைப்பற்றி வாரந் தவறுது பிரசங்கம் புரிந்து வந்தனர். அது கேட்டுப் பலர் மாமிச போஜனத்தை விடுத்து, பூதி கண்டி கைகளை மறவாது அணிபவர்களும், அனுஷ்டானக் கிரமங்களை வழுவாது புரிபவர்களும், ஆலயத்திற்கு விடாது செல்பவர்களுமாயினர். இவரது உத்தியோகம் பல நற்காரியங்களுக்கு இடையூறு யிருந்ததுபற்றி வயது இருபானறில் அதை விட்டொழித்தனர். கிறிஸ்து மதத்தில் வீழாவண் ணம் நிறுத்திய நில்லைநாதர்க்குத் தமிழிலக்கணம் போதித்துவந்தார். பிழைபடவிருந்த பல நூல்களைத் திருத்தி அச்சிடவேண்டுமெனும் அவா

வால் அச்சியந்திரம் வாங்கும்பொருட்டுச் சதாசிவம் பிள்ளையைத் துணை கொண்டுசென்னைவருங்கால் திருவாவடுதுறையையடைந்தனர். அங்குள்ள சுவாமிகள் இவரது கல்வித் திறத்தையும் வாக்கு வல்லமையையுங் கண்டு 'நாவலர்' என்ற சிறப்புப்பெய ரளித்தார்கள். பின்னர்ச் சென்னையை யணுகி அச்சியந்திரம் வாங்கிக்கொண்டு யாழ்ப்பாணம் வந்து "வித்தியானு பாலன யந்திரசாலை" யென ஓர் அச்சுக்கூடம் ஸ்தாபித்து, அரிய பல புத்தகங்கள் பதிப்பித்தனர். வயது மூப்பதாயது. கிறிஸ்து மார்க்கத்துள்ள வழுக்களைக் கூறிப் பல புத்தகம் வெளியிட்டனர். அறுமுகக் கடவுளின் அவதாரத்திலுள்ள ரகசிய தத்துவார்த்தத்தை விளக்குவான் வேண்டி, 'சுப்பிரபோதம்' எனும் ஓர் நூல் வெளியிட்டனர். இவரது வயதின் பக்குவங்கண்டுநண்பர் பலர் மணம்செய்துகொள்ளுமாறு இவரைப் பன்முறை வற்புறுத்தியும், அதற்குச் சிறிதும் சம்மதியாது சிவலிங்கபூஜை செய்வதற்குச் சிவ தீக்கை பெற்றனர். வயது 36 ஆயது. வண்ணூர் பண்ணையிலே "சைவப் பிரகாச வித்தியாசாலை" என்னும் செந்தமிழ்க் கழகமொன்றை ஸ்தாபித்தனர். பின்னர்ச் சென்னையை அணுகி, திருக்கோவையார், திருவாசக முதலியவைகளைத் திருத்தி அச்சிட்டனர். அதைவிட்டுப் பல தல யாத்திரை செய்துகொண்டு சிதம்பர மணுகி அங்கு ஓர் வித்தியாசாலை ஸ்தாபித்தனர். அக்கால் வயது 39. இவரது கல்வித் திறனைக் கேள்வியுற்ற இராமநாதபுரம் பொன்னுசாமித் தேவர் இவரைக் கொண்டு குறள், தருக்க சங்கிரகம், அன்னம்பட்டீய முதலியவற்றைத் திருத்தி வெளியிட்டனர். பின்னர் யாத்திரையாகப் பல நகர் சென்றனர். ஒவ்வொருகரிலுள்ள பிரபுக்களும், மடாதிபதிகளும் இவரை வந்தனத்தோடு வரவேற்று உபசாரம் புரிந்தனர். பலர் வித்தியாசாலைக்குப் பொருளுதவியும் புரிந்தனர். சிதம்பரம் இராமலிங்கப்பிள்ளை யவர்கள் கூறிய அருட்பா விஷயமாக இருவருக்கும் நேர்ந்த வாதம் ஒருவாறு முடிவு பெற்றது. வயது 44 ஆயது. கோப்பாயிலும், புலோலியிலும் இரண்டு வித்தியாசாலை ஸ்தாபித்தனர். ஈசுவர வருடம் மழைக் குறைவால் பஞ்சமுண்டாக, அக்கால் பல ஏழைகட்கு அன்னமளித்துக் காப்பாற்றினர். இவர் சைவ சமயத்திற்காக எழுதிய நூல்களும் செய்த பிரசங்கங்களும் பலவாம். இவ்வாறு 32 வருடகாலம் சைவ சமயப் பிரசங்க விஷயமாக மட்டில் உழைத்திருக்கிறார். பின்னர் யாழ்ப்பாணம் வர, தேகத்தில் சிறிது அசௌக்கியங் கண்டது. அதனால் ஸ்நானம் செய்தற்கும் சிவ பூஜை செய்தற்கும் இடையூறுனமைபற்றி வேதாரண்யத்துச் சைவாசாரியரைக்கொண்டு பூஜை நடத்திப் புஷ்பங்களை வாங்கித் தமது திருக்கரத்தாலேற்றுச் சிரசில் தரித்துக்கொண்டு சயனத்திலிருந்தார். இவரது

560

ஐம்பத்தாறும் வயதும் பதினெரு மாதமுமாகிய பிரமாதி ஆவ கார்த்திகை மீ 21-ம் உ சுக்கிரவாரம் மக நக்ஷத்திரம் சத்தமி திதி கூடிய புண்ணியகாலத்திலே இரவு 10 நாழிகைக்கு, சிதம்பரம், காசி, மதுரை, திருச்செந்தூர் முதலிய புண்ணிய தலங்களின் விபூதி யணிந்து, கண்டி கைபூண்டு கங்காதீர்த்த முட்கொண்டு சிவபெருமானுடைய நிருவடியை தியானம் செய்தவண்ணமாக ஸ்ரீ நடராஜப் பெருமானது குஞ்சித பாத நீழலை யடைந்தார். சுபம்.

வேதம்வலி குன்றியது மேதகுசி வாகம
விதங்கள்வலி குன்றினவடற்
குதன்மொழி மூவறுபு ராணம்வலி குன்றியது
சொல்லரிய சைவ சமயப்
போதம்வலி குன்றியது பொற்பொதிய மாமுனி
புகன்றமொழி குன்றி யதுகந்
நாதனடி ஞாலமிசை நாடரிய வாறுமுக
நாவல ரடைந்த பொழுதே.

கல்லாக ராறுமுக நாவலர்பி றந்திலரேற்
சொல்லுதமி ழெங்கே சுருதியெங்கே – யெல்லவரு
மேத்துபுரா ணாகமங்க ளெங்கே பிரசங்கம்
ஆத்தனறி வெங்கே யறை.

தி. வடிவேலு முதலியார்,
திருவெண்ணெய்நல்லூர்.

ரமணி.

ஓர் காதற் கதை.

(தொடர்ச்சி.)

அத்தியாயம் 9.

"மெய்யுடை யொருவன் சொன்மாட்டாமையால் பொய்போலும்மே பொய்போலும்மே" என்ற முதுமொழி, இக்காதற் கதையின் கடைசி அத்தியாயத்தைத் தொடங்கும்பொழுது எமது ஞாபகத்திற் புகுகின்றது. ஏனெனில், இப்பொழுது ஒரு ஆச்சரியகரமான ரகசியம் அறியுந் தறுவாயிலிருக்கின்றோம். அதை அறிந்தவுடனே "சீச்சி! இது

சுத்த அசம்பாவிதம்!'' என நமது நேயர்களிற் சிலர் எண்ணலாம். அவ்வர் றெண்ண நேரின், எமது சொற்றிறற் சோர்வே அதற்குக் காரணமா யிருக்கலாமன்றி, இக்காதற் கதையிலுள்ள ஒவ்வொரு சம்பவமும் நிகழக் கூடாததல்ல. ஒருகால் நமது தமிழ்நாட்டில் நிகழ்ந்துமிருக்கலாம். இம் முன்னுரையோடு இவ் வத்தியாயத்தைத் தொடங்குகின்றேம்.

சரஸ்வதிதாசர் பெரு நகையெல்லாம் அடங்கக் கடைசியாய் அவர் இதழ்களில் புன்னகை யிளிர்ந்தது. ''ஜனார்த்தனு! உனக்கும் எனக்கும் மனஸ்தாபம் விளைந்தால் அந்த க்ஷணத்திலேயே நான் என் மீசையையும் தாடியையும் எடுத்துவிடுவதாக முன்னொருமுறை உன் முன் சபதங் கூறினேனே, ஞாபகமிருக்கிறதா?'' என்றனர். ஜனார்த்தனன் முன்னி லும் அதிகமாக மருண்டு விழித்தனனேயன்றி யாதொரு பதிலும் பகர வில்லை எனெனில், சந்யாசி இப்பொழுது பேசிய குரலும், முன்பு ''ஜனார்த்தனு! என்னை அடிக்கவும் மனம் வந்ததா?'' என்ற குரலும், அவன் சரஸ்வதிதாசரை முதன் முதல் தரிசிப்பதற்கு முன்னமேயே கேட்ட குரல். ''இப்பொழுது நீ என்னைப் பகைத்துவிட்டாய். என் முதுகிலும் அடித்துவிட்டாய். இனி நான் என் வார்த்தை பிறழாது நடந்துகொள்ளவேண்டியதுதான். இதோ பார் வேடிக்கை!'' என்று சரஸ்வதிதாசர் தம் சிரத்திலிருந்த விசித்திரப் பச்சைக் குல்லாவைத் தம் கையாற் தட்டிக் கீழே தள்ளினர். ஜன்னலிலிருந்த ஒரு சொம்பை எடுத்து அதிலுள்ள ஜலத்தால் தம் முகத்தைக் கழுவினர். தம் மூக்குக் கண்ணாடியை எடுத்துக் கீழே எறிந்து உடைத்தார். தம் மீசையையும் தாடியையும் பிடித்திழுத்துக் கீழே எறிந்தார். தாம் தரித்திருந்த காஷாய அங்கியைக் கழற்றி எறிந்தார். உடுத்திருந்த காஷாய வஸ்திரத்தையும் அவிழ்த்தெறிந்தார். அப்பொழுது ஒரு மல் வேஷ்டியோடும் வெள்ளை அங்கியோடும் சுவாமி பிரகாசித்தார். அங்கியை மாத்திரம் களைந்தெறிந் தார். ஒரு பழுப்புநிறச் சட்டை அவர் மேனியிற் புலங்கியது. அதையும் எடுத்தெறிந்தார். 'ஷர்ட்' என்ற ஓர் வகை உட்சட்டையும், அதன்மீது தரிக்கின்ற ''வெயிஸ்ட் கோட்'' என்ற கையில்லாச் சட்டையும் தோன் றின. இடை, 'பெல்ட்' என்ற தோற் கச்சையால் கட்டப்பட்டிருந்தது. அக் கச்சையை எடுத்துவிட்டுப் பின்பு முற்கூறிய ''வெயிஸ்ட்கோட், ஷர்ட்'' இரண்டையும் களைந்தெறிந்துவிட்டு, உடுத்திருந்த மல் வேஷ்டி யையும் அவிழ்த்தெறிந்தார். அப்பொழுது, நமது கதாநாயகி ரமணி, தான் காணுமற்போன வன்றிரவு உடுத்திருந்த உடைகளோடு, காலுக்கு மாத்திரம் மேல்ஜோடு, 'பூட்ஸ்' தரித்துத் தன் அத்தான் கண் முன்பும் தன் தோழி சாவித்திரி கண் முன்பும் இலங்கினாள். சரஸ்வதிதாச சந்

யாசியின் நபத்தைக் காணேம். அந்தச் சந்யாசி தன்னை ஒரே ஒரு முத்த மிட்டதற்காகப் பிரஜ்ஞையற்று விழுந்த சாவித்திரி இப்பொழுது எழுந்து ஒரே பாய்ச்சலாகச் சந்யாசிக்கு நேராகப் பாய்ந்து "அடி ரமணீ! ரமணீ! நீதானடி!" எனக் கூவிக்கொண்டே சுவாமியை இறுகத் தழுவி அவர் இதழ்களை முத்தமிட்டாள். அவள் பாய்ந்த வேகத்தில் நீர சந்யாசியும் நிற்க இயலாமல் தடுமாறிக் கீழே வீழ்ந்தார். சாவித்திரியும் அவரைத் தழுவினவாறே வீழ்ந்தாள். ஜனர்த்தனன் இவ்விருவரையும் பிரித்து எழுந்திருக்கச் செய்து தன் அத்தை பெண்ணின் கன்னத்தைப் பேரன் போடு முத்தமிட்டான். ரமணி அம் முத்தத்தினின்று தன்னைத் திமிறிக் கொண்டு "இனி என்னை நீங்கள் தொடலாமா அத்தான்! ஏக பத்தினி விரதாகிய நீங்கள், சாவித்திரியின் கணவராகிய நீங்கள் என்னைத் தொட லாமா!" எனக் கூறிச் சற்று விலகி நின்றாள். "அடி என் கள்ளீ! என் ரமணீ! என் ரசமே! உன்னை முத்தமிடும் உரிமை எனக்கில்லாமல் வேறு யாருக்குண்டு! ஆனால் ஒருகால் நீ அந்தச் சுதந்தரத்தைச் சரஸ்வதிதாச சந்யாசிக்குக் கொடுத்திருக்கிறாயோ?" என்று நகைத்துக்கொண்டே ரமணி யருகே நெருங்கினன் ஜனர்த்தனன். "அத்தான்! உங்கள் சாவித்திரியின்மீதும் ரமணியின்மீதும் ஆணையிடுகின்றேன். இப்பொ ழுது என்னைத் தொடாதேயுங்கள். முதன் முதல் நமது வியவகாரத் தைப் பேசி முடிப்போம்." என்று சிரித்துக்கொண்டே சந்யாசியின் நீரத் தொனியில் கர்ஜித்தாள் ரமணி. ஜனர்த்தனன் அவளை நெருங்காது, "என்ன வியவகாரம்? கட்டிலில் உட்கார். நீயும் உட்கார் சாவித்திரீ!" என்று கட்டிற் புறமாய்ப் போனன். மூவரும் அதன்மீ தமர்ந்தனர். ரமணி சாவித்திரியின் தலையைச் சாய்த்துத் தன் மடியி லமர்த்திக்கொண் டாள். அந்தச் சௌந்தரியப் பேதையும் அன்பினற் கட்டுண்டு ஒரு குழந் தையைப்போலத் தன் கணவன் முன்பு ரமணி மடியிற் படுத்துக்கொண் டாள். "எனத்தான்! நான் விஜயவிலாச பங்களாவிலிருந்து தப்பிய வுடனே நேரே வீட்டுக்கு வராமல் சரஸ்வதிதாச சந்யாசியாக நடித்து, உங்களைக் கண்டு குருவியின் காலில் ரமணி கடிதங்கட்டி யனுப்பினள் என்று என்னென்னவோ பொய்க் கதைகளெல்லாம் சொல்லி, இன்னும் என்னென்னவோ திருட்டுச் செய்கைகளெல்லாம் செய்ததற்காக என் னிடத்தில் உங்களுக்கு அளவற்ற கோபமிருக்கு மல்லவா?" என்றாள் ரமணி. ஜனர்த்தனன் கட்டிலிலிருந்து கீழே குதித்தான். தன் வலக் கையால் ரமணியின் இடக்கையைப்பற்றி அவள் முகத்தை உற்று நோக் கிக் கூறலாயினன். "என் முகத்தைப் பார். ரமணீ! என் முகத்தைப் பார். எல்லோரையும்போல் உன்னை ஒரு சாதாரண ஸ்திரீயாக நான்

நினைத்த பிழையை கூமிப்பாய். நீ மானிட ஜாதியில் பிறந்தாலும், உன்னைத் தேவ ஸ்திரீயென்றே சொல்லவேண்டும். ஆ! உன் முகம் என்ன தேஜஸுடன் இப்பொழுது பிரகாசிக்கிறது. ரமணீ! என் கற் கண்டே! உன்னோடு பேசிப் பழகியிருப்பதும், உன் அத்தானுய் நான் பிறந்ததும், உன் காதலை நான் பெற்றதும், இவைகளைவிட வேறு சுவர்க்க போகம் என்ன இருக்கிறது! ரமணீ! நான் தொழும் சரஸ்வதி தேவி சாட்சியாகச் சத்தியமாய்ச் சொல்லுகிறேன் கேள். நீ என் ரமணி. நீ என் அத்தை பெண். நீ என் காதலி. நீ என் தாய். நீ என் தந்தை. நீ என் குரு. நீ என் தெய்வமாகிய சரஸ்வதியே. உன் விருப்பம் என் விருப்பம். உன் இன்பம் என் இன்பம். நீ எதை——" "போதும் போதும், அத்தான்! உட்காருங்கள்." என்று ரமணி தன் விழிகளில் நீர் ததும்பத் தன் வலக்கையால் தன் அத்தான் வாயை மூடி அவனைக் கட்டிலில் அமர்த்தி, "என்னை என் இப்படி வீணுய்ப் புகழுகிறீர்கள்? நான் ஒன்றுஞ் செய்யவில்லையே." என்றனள். "என்னோடு இப்படி உபசாரமாகப் பேசாதே ரமணீ! மனப்பூர்வகமாய்ச் சத்தியத்தைப் பேசு. விஜயரங்கதாசர் விவாகத்தை நிறுத்திய உன் சாமர்த்தியம் ஆயிரம் ஆசாரச் சீர்திருத்தக்காரர்களுக்கும் இருப்பது அருமை." என்றான் ஜனார்த்தனன். "அதைவிட மிகவும் உயர்ந்தது அவள் உடனே உங்கள் கல்யாணத்தை நிறைவேற்றிய சாமர்த்தியம்." என்று ரமணியின் மடியிற் படுத்திருந்த சாவித்திரி எழுந்து ஜனார்த்தனன் முகத்தை நோக்கி மொழிந்து, பின்பு ரமணியைப் பார்த்து, "உன்னை நான் பிரியாமலே இருக்கவேண்டுமென்றுதானே உன் அத்தான் கையால் என் கழுத்தில் தாலி கட்டுவித்தாய். உனக்கு என்னிடத்தில் அவ்வளவு அன்பா! உன் அத்தான் சொன்னபடி நீ ஒரு தேவ ஸ்திரீயே யன்றி மானிட ஸ்திரீயல்லடி." என்றுள். "சாவித்திரீ! நான் உபசாரப் பேச்சை விட்டுவிட்டு உண்மையைச் சொல்லவேண்டுமென்று உன் அத்தான் எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார். ஆகையால் நான் உண்மையைச் சொல்லுகிறேன். உன்னிடத்தில் எனக்குள்ள அன்பினுல் நான் உன் கல்யாணத்தை நிறைவேற்றவில்லை. அதற்குக் காரணம் வேறு." என்றுள் ரமணி. "வேறு என்ன காரணம்! ஓ! இப்பொழுது ஞாபகம் வருகிறது. நான் உன் அத்தானைக் காதலிக்கிற ரகஸ்யத்தை என் நிச்சதார்த்தத்திற்கு முந்திய இரவு உனக்குச் சொன்னேனே. அதற்காகவா நீ என்னை உன் அத்தானுக்குக் கல்யாணஞ் செய்வித்தாய்?" என மீண்டும் வினவினள் சாவித்திரி. "இல்லை அதற்காகவல்ல. வேறொரு காரணம்." என்றுள் ரமணி. "வேறொரு காரணமா! கள்ளீ! அந்தக் காரணம் எனக்குத் தெரியும்.

நீ சாவித்திரியின் நிச்சிதார்த்தப் பத்திரிகையை வாசித்தவன்று இந்த அறையில் வந்து என்னைப் பல கேள்விகள் கேட்டு என் காதல் ரகசியத்தை அறிந்தாயே. அதுதானே காரணம்?'' என்றான் ஜனார்த்தனன். ''அத்தான்! நீங்கள் சொன்னதும் சாவித்திரி சொன்னதும் சில காரணங்கள்தான். ஆனால் எல்லாவற்றிற்கும் ஏக மூலகாரணம் ரமணியின் மனம் ஜனார்த்தனரிடம் கொண்ட காதல் என்ற அற்புத அனுபூதான். அந்தக் காதல்தான் என் துணிவிற்கும், என் சாமர்த்தியத்திற்கும், என் வெற்றிக்கும் ஏக மூலகாரணம். சாவித்திரீ! நீ ஒரு புருஷரைக் காதலித்தாய். அந்தப் புருஷரும் உன்னைக் காதலித்தார். உன் தோழியின் உதவியால் உங்களிருவருக்கும் மணம் நிறைவேறிற்று. இது உன் காதற் கதை. என் காதற் கதையைக் கேள். நான் ஜனார்த்தனரைக் காதலித்தேன். அந்தக் காதலின் முதிர்ச்சியால் ஜனார்த்தனரைத் தவிர, சகலபற்றுக்களும் என் உள்ளத்தை விட்டு நீங்கியது. என் காதலர், தாய், தந்தை, சகோதரன், சகோதரி, குரு, தெய்வம், உயிர் முதலிய யாவும் ஜனார்த்தனரே என்றெண்ணினேன். அவர் இன்பமே என் இன்பம். அவர் துன்பமே என் துன்பம். அவர் விருப்பமே என் விருப்பம். வார்த்தையை வளர்ப்பானேன்! அவரே நான் என்று இயற்கையாகவே என் மனம் எண்ணியது. அவர் ரமணியைக் காதலிக்கவில்லை, சாவித்திரியைக் காதலித்தார். அவர் விருப்பம் என் விருப்பமல்லவா! அவரே நானல்லவா! ஆகையால், சாவித்திரீ! உன்னை அவருக்கு மணஞ் சூட்டுவித்தேன். சாவித்திரீ என்மேல் கோபித்துக்கொள்ளாதே. நீ விஜயரங்கரை வெறுத்ததைவிட நூறுமடங்கு அதிகமாக ஜனார்த்தனரை வெறுத்திருந்தாலும் அப்பொழுதும் எவ்வாறேனும் உன்னை என் அத்தானுக்கு மணஞ் செய்வித்து என் உயிரைக் கொடுத்தாவது நான் உன் வெறுப்பை ஒழித்து அவரிடம் உன் உள்ளத்தில் காதலைச் சிருஷ்டித்திருப்பேன். ஏனென்றால் என் அத்தான் உன்னைக் காதலிப்பதால், அவர் விருப்பத்தை நிறைவேற்றுவதுதான் என் காத்லின் விரதம். சாவித்திரீ! உன் பெயர் வகித்த ஒரு புண்ணியவதி தான் காதலித்த சத்தியவானுக்கு, யமன் கையிற் சென்ற உயிரை மீட்டுக் கொடுத்தாள். என் காதலின் சக்தியால் நான் என் காதலர் ஜனார்த்தனரது உயிர்க்கு உயிராகிய சாவித்திரியை அளித்தேன். இந்த ஒரே ஒரு அகந்தை மொழியைச் சொன்னதற்கு, அத்தான்! சாவித்திரி! உங்கள் ரமணியை மன்னித்துக்கொள்ளுங்கள்.''

உள்ள உருக்கத்தின் பெருக்கத்தால் இரு விழிகளிலும் ஜலம் பொங்கிப் பொங்கி வழிய, இதழ்கள் பதைக்க இம்மொழிகளைக் கொட்டிவிட்டுத் தன் கரங்களால் சாவித்திரியின் கழுத்தை யணைத்து அவள்

முகத்தைப் பன்முறை முத்தமிட்டாள் காதல் என்ற உள்ளக் கிளர்ச்சியின் உன்னதத்தையும் அற்புதத்தையும் உண்மையாக உணர்ந்த நமது ரமணி. பின்னும் அன்பினால் இம்மூவரும் மிக உருக்கமாகப் பேசிய சம்பாஷணையை இங்கே உரைக்க இடமில்லையே! என் செய்வது! அவர்கள் பேச்சில் கதை முடிபுக்கு அத்தியாவசிகமானவற்றை மாத்திரம் சுருக்கமாகக் கூறுகின்றோம். ரமணி தன் அத்தானோடும் சாவித்திரியோடும் வசித்து என்றும் அவர்கள் இதத்தையே நாடினவளாய் நித்ய கன்னிகையா யிருப்பதாகக் கூறினாள். ஆனால் ரமணி தன் அத்தானை மணந்து கொண்டா லன்றிச் சாவித்திரியும் ஜனார்த்தனரும் ஒருவரை யொருவர் தீண்டுவதில்லையென்று, சாவித்திரியின் விவாகத்திற்குப் பின்பு அவளும் அவள் கணவரும் முதன் முதல் ஏகாந்தமா யிருந்தபொழுது இருவரும் பிரதிஜ்ஞை செய்திருப்பதாகக் கூறி, ரமணி தன் அத்தானை விவாகஞ் செய்துகொள்ளத்தான் வேண்டுமென்று இருவரும் வற்புறுத்த, ரமணி தன் அத்தான் இஷ்டத்தை நிறைவேற்றும் விரதங்கொண்ட தன் காதலுக்காகத் தன் அத்தானை விவாகஞ் செய்துகொள்ளச் சம்மதித்தாள். பின்பு பங்கஜவல்லியம்மாளை எழுப்பி அறைக் கழைத்து வந்து அவளுக்குச் சகல சவிஸ்தாரங்களையும் தெரிவித்தார்கள். பின்னர் ரமணி எவ்வாறு விஜயவிலாச பங்களாவிலிருந்து தப்பித்தாள். தப்பிய பின்பு என்னென்ன செய்தாள் என்பது முதலிய பற்பல விஷயங்களைப்பற்றிப் பேசினார்கள். பொழுது புலர்ந்தது. சரஸ்வதிதாச சந்யாசி இதுகாறும் ரமணியை எங்கேயோ ஓரிடத்தில் கௌரவச் சிறையில் வைத்திருந்து, பின்பு விடுவித்தார் என்று போலீசார்க்கும் எனையோர்க்கும் உரைக்கவற்பாடு செய்தாள் நமது கன்னக் கதாநாயகி. போலீசார் நெடுநாளாகச் சரஸ்வதிதாச சுவாமியைத் தேடி, அவர் அகப்படாமையால் அவரை முற்றும் மறந்துவிட்டார்கள்.

அடுத்த மாதத்தில் ரமணிக்கும் ஜனார்த்தனனுக்கும் விவாகம் நிறைவேறிற்று. ரமணி, சாவித்திரி, ஜனார்த்தனன் ஆகிய மூவரும் ஏக மனத்தினர்ய் அற்புத திருப்தியோடும் இன்பத்தோடும் வாழ்ந்தனர்.

கதா நேயர்கள்! நமது இறைவியின் நிருநாமத்தையே பூண்ட 'கலைமகள்' என்ற இவ்வரிய பத்திரிகையில் இக் காதற் கதையை இவ்வளவோடு முடிக்கின்றோம். பத்தொன்பது சஞ்சிகைகளில் இக் கதை வெளிவந்தும் பல விவரங்களை விடுக்கும்படி நேரிட்டமைக்கு மனப்பூர்வகமாக விசனிக்கின்றோம். கூடியவிரைவில் இக்கதையைப் புத்தக ரூபமாக வெளிப்படுத்த நிச்சயித்திருக்கிறபடியால் மேற்படி கதையில் விடப்பற்ற விவரங்களனைத்தும் அப்புத்தகத்தில் விரிவாகக் காணப்படும்.

2.

566

எம்பாற் கண்ட குற்றங்களே நீங்கள் கூமிக்கவேண்டுமென்பது எமது கடைசி வேண்டுகோள். சுபம். கலைமகள் கடாக்ஷம் பெருகுக.

(ஆசிரியர் அநுமதியின்றி இக் கதையை ஒருவரும் பிரசுரிக்கக் கூடாது.)

சு. அ. சுப்பராயப்பிள்ளை.

பால சிகூக்ஷை.

8-வது அத்தியாயம்.

4-வது வயது.

அறிவுப் பயிற்சி.

(தொடர்ச்சி.)

குழந்தைக்கு அறிவு பஞ்சேந்திரியங்களின் வழியாகவே முதலில் ஏற்படுகிறதென்பதையும், ஆதலின் ஐம்பொறிகளும் தத்தம் தொழில்களே மிக நேர்மையாகப் புரிதற்கு அவைகளே ஆதியிலிருந்தே பழக்கி வருதல் அத்தியாவசிகம் என்பதையும் முன்னரே விளக்கியுள்ளோம்.

ஒரு பதார்த்தத்தை நன்கு அறிதற்கு அதன் ருசி கந்த ரூப வர்ண பரிமாணாதி தத்துவங்களே முன்னறிதல் அவசியமாகின்றது. ஐம்பொறிகளி னுதவியின்றி இத் தத்துவங்கள் நமக்கு எங்ஙனம் புலப்படும்? அன்றியும் பூரணத் தேர்ச்சியடைந்த பொறிகளே நமக்குப் பொருள்களின் பூரண அறிவைப் புகட்டும். பழுதுற்ற பொறிகளினுல் பழுதுற்ற அறிவே யேற்படும். உதாரணமாக, மஞ்சள்காமாலை என்னும் பிணியுற்றவனுடைய கண்ணுக்கு எல்லாப் பதார்த்தங்களும் மஞ்சள் நிறமாகவே காணப்படும். தும்பைப்பூப் போன்ற வெண்ணிறப் பொருள்களும் அரிசன மயமாகத் தோன்றி அறிவை மயக்கி அவனைப் பிழையுட்படுத்தும். ஆதலின் புலப் பயிற்சி அறிவுப் பயிற்சிக்கு இன்றியமையாத உபகரணமாக இருக்கின்றது.

சிசுப் பிராயத்தினின்றே பொறிகளே நன்கு பயிற்றி, பலபல பொருள்களைப் பலபல வாறுகக் குழந்தைகளுக்குக் காண்பித்து இதன் வழியாக அறிவு விருத்தியாகும்படி செய்துவாவேண்டும்.

எக்காலத்தும் எத்தேயத்தும் சாதாரணமாகக் கிராம வாசிகளை விட நகர வாசிகள் புத்தியில் மேம்பாடுடையவர்களாக இருத்தலே அனுபவத்தினால் அறிகின்றோம்.

இவ்வாறு அறிவு மலர்தற்கு, பட்டணங்களிலுள்ள நானாவித பொருள்களின் நிரந்தரப் புலனுகர்ச்சியே முக்கிய காரணமாகும். ஆயினும் இந்திரியங்களால் லேற்படும் அறிவு சிறந்ததன்று. மற்றப் பிராணிகளுக்கும் அத்தகைய இந்திரிய போதமுண்டு. மனிதன் சர்வ சிருஷ்டிகளிலும் சிறந்தவனுதற்கு, இந்திரிய போதத்தைத் தன்னுள் சுடருற் றெரியும் அறிவென்னும் தெய்விக ஒளியினால் விளக்கும் சக்தியொன்றுடைத்தா யிருத்தலே காரணமாகின்றது.

தவிர, ஐம்பொறிகளால் லேற்படும் உணர்வை ஆத்ம ஞானத்தால் விளக்கியறியும் விருப்பமும் மனிதனொருவனுக்கே யுண்டு. உதாரணமாக, அபூர்வப் பொருளொன்றை ஒரு மிருகம் கண்ணுற்றால், அப்பொருளால் தன் உயிருக்கு அபாய மேதேனும் ஏற்படக்கூடுமா, அல்லது தன் ஆகாரத்திற்கு அது உபயோகப்படுமா என்கிற வரையில் அதைக் கவனித்து நிற்கும். அப்பொருளால் தனக்கு இலாப நஷ்டம் ஒன்றுமில்லையென்று அறிந்த அம்மாத்திரத்திலேயே அதன்மீதுள்ள அக்கறையொழிந்துவிடும்.

மனிதனுவெனில், அதே வஸ்துவைக் கண்ணுற்றால் அதனால் நயநஷ்டமொன்றுமின்றென்று உணர்ந்த பின்னரும், அவ் வஸ்து யாது, அது ஏன், எப்போது, எவரால், எவ்வாறு அவ்விடம் வந்தது, அதன் குணகுணங்களெவை? இத்தகைய ஆராய்ச்சிகள் செய்து அறியும் அபேக்ஷையுள்ளவனு யிருக்கின்றான்.

மிருகங்களுக்கு ஆகாராதிகள்மீது அவா எப்படியோ அப்படி நமக்கு அறியவேண்டுமென்பதில் ஆசை இருக்கிறது. இந்த அபேக்ஷை மூன்று நான்கு வயதுள்ள குழந்தைகளிடத்தில் அபரிமிதமா யிருக்கின்றது. சிறுகுழந்தைகள் எதைக் காணினும், இது என்ன, எவரது, எங்கிருந்து வந்தது, எப்படிச் செய்யப்படுவது, இதன் உபயோகமென்ன? இத்தகைய கேள்விகளினால் நாம் விடை பகரச் சலிப்பினும் வினவச் சலியாமலிருப்பதைக் கண்கூடாகக் காண்கின்றோமன்றோ?

தவிர, ஆடும், ஓடும், பாடும் யந்திர விளையாட்டுப் பொருள்களைக் குழந்தைகளுக்குக் கொடுப்பின், அப்பொருள்களோடு விளையாட்டயர்ந்து உல்லாசப்படுவதிலும் அவைகளைச் சிதைத்தேனும் அவைகளின் சூத்திர சூக்ஷமங்களை அறியத் தேடுகின்றன. அறியவேண்டுமென்னும் விருப்

பம் மனிதனுக்குச் சிறுபிராயந் தொட்டு இயல்பாக ஒரு அக்கறையாகவும் இன்பமாகவும் இருக்கிறதென்பதற்கு இதுவே ஒரு சாக்ஷியாகும்.

இவ்வபேக்ஷையே அறிவுப் பயிற்சிக்கு உன்னத வழிகாட்டு முறையாகவும் உபகரணமாகவும் அமைந்துள்ளது. பல்வேறு பொருள்களைக் குழந்தைகளுக்குக் காண்பித்து அவைகளை உற்று நோக்கி அவைகளின் குணகுணங்களை அதிக கவனத்துடன் வகுத்தறியும்படி பயிற்றி வர வேண்டும்.

புலன்களாலேற்படும் போதம் தானாகவே மனதில் பதிந்து நிற்கும் தன்மையுள்ளதன்று. விசேஷ கவனம் அதன்மீது சென்றால் மாத்திரம் அவ்விந்திரிய போதம் அறிவெனும் மாறு ரூபங்கொண்டு மனதில் நிலைநிற்கும். கவனத்தினால் மனதில் இக்கியப்படாத புலனுகர்ச்சி நீர்மேலெழுத்துப்போல் தோன்றுவதற்குள் மறையும். உதாரணமாக, நமது கவனம் வேறொரு விஷயத்தில் அழுந்திநிற்கும் சமயத்தில் புலனுகர்ச்சி நம்மைவிட்டு அகன்று நிற்கிறது. எதிர்நிற்கும் பொருள்களும் கண்ணுக்குத் தோன்றா. சப்தத்தைச் செவிகள் ஏற்கா. ஒருவர் தொடினும் ஸ்பரிசம் தோன்றாது.

கவனமில்லாதபோது இந்திரியபோதம் அறிவாக மாறி மனதில் நிற்காதென்பதற்கு வேறொரு உதாரணம் கூறுவாம்.

நாம் வசிக்கும் பட்டணத்தில் தினப் பிரவர்த்திக்காக நாம் சென்றுவரு மார்க்கத்தில் அமைந்துள்ள வீடுகளில் ஒன்றை உதாரணமாக எடுத்துக்கொள்வோம். அவ்வீட்டை நாம் பல்லாயிரந் தடவை பார்த்திருக்கினும் அதன்மீது ஒருதரமாயினும் நமது விசேஷ கவனம் சென்றிராவிடில் அதிலுள்ள சாளரங்களினதும், ஸ்தம்பங்களினதும் இலக்கம் முதலிய கட்டட அமைப்பு நமது மனதில் பதிந்திராது. அதற்மாறாக, அக் கட்டடத்தை ஒரே முறை விசேஷ கவனத்துடன் கண்ணுற்றிருந்தால் அதன் விவரங்களெல்லாம் நமது மனதை விட்டு என்றும் அகலா.

ஆகவே, கவனம் அறிவுப் பயிற்சிக்கு இன்றியமையாததாயிருக்கின்றது.

(வரும்.)

த. பு. அம்மணியம்மாள்.

பிரகிருதி சாஸ்திரம்.

இரண்டாம் பாடம்.

(தொடர்ச்சி.)

மாறத வேகம், மாறும் வேகம். ஒரு ரெயில்வண்டித் தொடர் புறப்பட்ட ஒரு நிமிஷத்தில் அரை மைல் தூரம் ஓடி அதே வேகத்தோடு ஓடினால் மறு நிமிஷத்தில் அரை மைல் தூரமும் அதற்கடுத்த ஒவ்வொரு நிமிஷமும் அரை அரை மைல் தூரமும் செல்லும். அவ்வாறு ஓடும் வண்டித்தொடரின் வேகத்திற்கு மாறத வேகம் என்று பெயர். இதை ஏக வேகம் என்றுஞ் சொல்லலாம். ஒரு ரெயில்வண்டித் தொடர் புறப்பட்ட முதல் நிமிஷத்தில் 800 கஜ தூரமும் அடுத்த நிமிஷத்தில் 1000 கஜ தூரமும் அதற்கடுத்த நிமிஷத்தில் 1500 கஜ தூரமும் ஓடி, இவ்வாறு ஒவ்வொரு சமமான காலவரையிலும் அது ஓடும் தூரம் வேறுபடுமாயின் அதன் வேகம் மாறும் வேகம் என்னப்படும்.

சராசரி வேகம். முற்கூறிய உதாரணங்களில், ஏக வேகத்தோடு ஓடும் வண்டித் தொடர் ஒவ்வொரு நிமிஷத்திலும் அரை அரை மைல் தூரம் செல்வதால் அதன் வேகம் நிமிஷத்திற்கு அரை மைல் என்று குறிப்பிட்டுச் சொல்லலாம். ஆனால் மாறும் வேகத்தோடு ஓடும் வண்டித் தொடரின் வேகத்தை எப்படிக் குறிப்பிட்டுக் கூறுவது? முதல் நிமிஷம் 800 கஜம், இரண்டாவது நிமிஷம் 1000 கஜம், மூன்றுவது நிமிஷம் 1500 கஜம் என்றவாறு ஒவ்வொரு நிமிஷமும் அது ஓடுந் தூரங்களைக் குறிப்பிடாமல் அதன் மாறும் வேகத்தை வேறு விதமாய்ச் சுருங்கச் சொல்வதுண்டு. மூன்றுமணி நேரத்தில் அந்த வண்டித் தொடர் ஓடிய மொத்தத் தூரம் 72 மைல் ஆயின், அந்த மூன்றுமணி நேரத்தில் அது மணிக்கு 24 மைல் சராசரி வேகத்தோடு ஓடியது, அல்லது நிமிஷத்திற்கு 704 கஜ சராசரி வேகத்தோடு ஓடியது என்னவேண்டும். (1 மைலுக்கு 1760 கஜம். ஒரு மணிக்கு 60 நிமிஷம்.)

பெருதும் வேகம், குறுதும் வேகம். அசைகின்ற ஒரு வஸ்துவின் வேகம் அதிகரித்துக்கொண்டேயிருந்தால் அந்த வேகம் பெருதும் வேகம் என்னப்படும். சாதாரணமாய் ரெயில்வண்டித் தொடர்கள் ஒரு ஸ்டேஷனை விட்டுப் புறப்படும்பொழுது பெருதும் வேகத்தோடு சென்று சற்றுநேரத்திற்குப் பின்புதான் ஏக வேகத்தோடு செல்லுகின்றன. ஒரு வஸ்துவின் வேகம் குறைந்துகொண்டேயிருந்தால் அந்த வேகம் குறுதும் வேகம் என்னப்படும். ஒரு ரெயில்வண்டித் தொடர் ஒரு ஸ்டேஷனை

570

அணுகி அங்கே நிற்பதற்காக வரும்பொழுது குறுகும் வேகத்தோடு வருகின்றது.

ஜடத்தன்மை, சக்தி. ஜடத்தன்மை வாய்ந்திருத்தல் வஸ்துக்களின் லக்ஷணங்களி லொன்று என்று முன் பாடத்திற் சொன்னேம். வஸ்துக்கள் தாமாகவே யாதொரு மாறுபாடும் அடையா ஆகையால் அமைதியிலிருக்கும் ஒரு வஸ்து தானுகவே அசையாது. அவ்வாறே அசைவிலிருக்கும் ஒரு வஸ்து தானுகவே அமைதியைப் பெறுது. வஸ்துக்களின் இந்த லக்ஷணத்தைத் தமோ குணம் என்றுஞ் சொல்லலாம்.

வஸ்துக்களின் ஸ்திதியை மாற்றுகின்ற காரணத்திற்குச் சக்தி என்று பெயர். வஸ்துக்கள் தமோ குணமுள்ளன வாதலின் யாதேனும் ஒரு காரணத்தாலன்றி யாதொரு மாறுபாடுமடையா. அமைதியிலிருக்கும் ஒரு வஸ்துவை அசையச் செய்வதற்குச் சக்தி வேண்டும். அசைவிலிருக்கும் ஒரு வஸ்துவை அமைதியிலிருக்கச் செய்வதற்கும் சக்தி வேண்டும். ஒரு வஸ்துவின் வேகத்தைப் பெருகச் செய்வதற்கும் சக்தி வேண்டும். குறுகச் செய்வதற்கும் சக்தி வேண்டும். சக்தியின்றி அமைதியிலிருக்கும் எந்த வஸ்துவும் அசையாது. அசைவிலிருக்கும் எந்த வஸ்துவும் அமைதியுறுது. எந்த அசைவின் வேகமும் பெருகாது. எந்த அசைவின் வேகமும் குறுகாது.

தென்னமரத்தில் காம்பு இற்ற தேங்காய் தானுகப் பூமியில் விழுவதாகத் தோற்றினும், அது தானுக விழவில்லை. ஒரு சக்தியே அதை விழச் செய்கிறது. சிறுவ னொருவனுல் பூமியி லுருட்டப்பெற்ற ஒரு கோலிக்குண்டு உருண் டுருண்டு சென்று சற்று நேரத்தில் நின்றுவிடுகிறது. சிறுவனது கைவிரல்களின் சக்தியால் உருட்டப்பெற்ற கோலிக்குண்டு தானுகவே நின்றுவிடவில்லை. ஒரு சக்தி அல்லது பல சக்திகளினுல் அதன் உருட்சி தடுக்கப்பட்டிருக்கத்தான் வேண்டும். தேங்காய் விழச் செய்ததும், கோலிக்குண்டின் உருட்சியைத் தடுத்ததுமாகிய சக்திகளைப்பற்றிப் பின்னிட்டு ஆராய்வோம்.

(இன்னும் வரும்.)

பாரதி பக்தன்.

ஆனந்த முரசு.

முரசு — 2.

"நாச்செற்று விக்குண்மேல் வாராமு னல்வினை
மேற்சென்று செய்யப் படும்" (குறள்.)

நித்யானந்தர் என்னும் ஓர் சந்நியாசி யாத்திரை நிமித்தம் வெகு தேசங்களிலும் சுற்றிக் கடைசியில் மாயாபுரி என்னும் ஓர் நகரத்தை யணுகையில், பசியால் மிகவும் கஸ்தியடைந்து, பலவீதிகளிலும் சென்று யாசித்தும் ஒருவரும் அன்னமிடாதது கண்டு, மனம் வாடி, தள்ளாடி மெள்ள ஓர் மிட்டாய்க் கடையைச் சார்ந்து, அதனெஜமானனை நோக்கித் தன் பசியை நிவர்த்திக்கவேண்டி நின்றனர். சுதர்மன் என்னும் அவ் வணிகன், அப் பெரியாரை வணங்கி எழுந்து, இரு கரங்களையும் பற்றி உட்சென்று ஆசனத்திருத்தி, சைத்யோபசாரங்களால் களையாற்றி, தன் கடையிலுள்ள எல்லாவகை உண்டிகளையும் எதிர்வைத்து, மிக வினயத் துடன் எதிர்நின்று, ஸ்வாமியைத் திருப்தியாய் உண்ண வேண்டினன். பெரியாரும், அவ்விதம் தன் பசியை நிவர்த்தித்துக்கொண்டு, சுதர்மனின் பக்கிக் கிரங்கி, "அன்ப, உன் மனதின் நேர்மைக்கு யான் இன்று அடிமையானேன். உனக்கு, இவ்வுலகில் உடலெடுத்த மானிடர் பெறும் எல்லாப் பாக்கியங்களிலும் மேலான பதவி எதோ அதை உனக்குக் கொடுக்க மனமுவந்தேன். பின் தொடர்ந்து" என்று கூறி எழுந்தனர். சுதர்மன், "ஸ்வாமி, தங்கள் கருணை மட்டும் எனக்குப் பூரணமாயிருக்கும் பக்ஷத்தில் நான் என்றென்றைக்கும் திருதார்த்தனே. இதில் யாதொரு ஐயமுமில்லை. ஆனால் பெரியோர்களால், "புத்திர பாக்கிய மற்றவன் புத் என்னும் நரகத்தில் வீழ்வன்" என்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆதலால் அந்த மனோரதத்தைப் பூர்த்தி செய்துகொண்டு பின் தங்களைப் பின்பற்றுவேன். அதுவரை தாங்கள் இவ்விடமே யிருந்து என்னை அழைத்துச் செல்லுவீர்" என்று வேண்டினன்.

நித்யானந்தர் புன்னகையுற்று, ஒகோ! இவன் "குடும்பை தனித் தொழியப் புட்பறந் தற்றே யுடம்போ டுயிரிடை நட்பு" என்னும் உண்மையை யறியாது, தன்னைச் சதமென்று நம்பியன்றோ சத்தி யடையக் கெடுவிடுகின்றான். போகட்டும். இவன் மனதின்படியே கொஞ்சம் விட்டு இவனைத் திருப்புவோமென்றுன்னி, "சுதர்மா, உன் இஷ்டப்படியே யாகுக. அவ்வாறே உனக்கு ஓர் புத்திர ரத்தினம் உதிக்கும். நான் மறுமுறை வருகிறேன்" என்று கூறி யாத்திரைக்குச் சென்றனர். அவ்

572

வாறே, பெரியவரி னனுக்கிரகத்தால் நல்ல சுபதினத்தில் சகல ஐசுவரியமு மூண்டாகக்கூடிய ஓர் நிவ்ய புத்திரன் ஜனித்தனன்.

ஒரு நாள் சுதர்மன் தன் மகனை மடியில் வைத்துச் சோட்டி மகிழ்ந் திருக்கையில், நித்யாநந்தர் விஜயஞ் செய்து க்ஷேமம் விசாரித்து, ஒரு தினம் கழித்து, மறுதினம் தாம் வந்த கருத்தைத் தெரிவித்தார். வணி கன் மனம் வாடிற்று. ஸ்வாமியின் மலரடி தாழ்ந்து, "புனிதரே, தங்கள் திருபையால் எல்லாச் சம்பத்தும் நிறைந்திருந்த எனக்குப் புத்திர சம்பத் தும் கிடைத்தது. ஆனல், இச் சிசுவை யான் விட்டு வந்தால், அதை ஆதரிப்பாரின்றி அநாதையாய்விடும். ஆதலால் தாங்கள் இட்ட பிச்சை யின்மேல் கொஞ்சம் இரங்கி இவன் பெரியவனுகி, கலியாணச் சடங் கேற்றி, என் குடும்ப பாரத்தை இவன் வகிக்கத் தகுந்தவனுகும் வரையில் எனக்கு விடைகொடுக்க வேண்டுமென்று இரு கண்களிலும் நீர் பெருக நாத்தழதழக்கப் பிரார்த்தித்தனன்.

(தொடரும்.)

M. V. சுப்ரமண்ய ஐயர்.

யாக்கை நிலையாமையும், அதனு லெய்தவேண்டிய பயனும்.

பூவினுண் மணம்போலும், அவிரொளி யனலின் வெப்பம்போ லும், நீருட னமையுந் தண்மைபோலும், அங்கிங்கின்றி யெங்கும் நிறை வுற்ற அவிர்சடைப்பரமன் நினைவினு டெழுந்த அரும்பேருலகினுள், நால்வகைத் தோற்றம், எழுவகைப் பிறப்பு, எண்பத்துநான்கு நூருயிர யோனி பேதத்தினின்றும் நீங்கி ஐயறிவுயிரா மளவிடற்கரிய வருமை வாய்ந்த மானிட யாக்கை யமைவுறப் பெறுதல், கடலினைக் கடத்தற் பொருட்டு நீந்தினவன் காரியத்தை யொக்குமென்பது, நுண்ணூலுணர்ந்த நுண்ணறி வுடையோராற் றெள்ளிதி னுணரப் போதரு மன்றே. இது வன்றியும், "எண்ணரிய பிறவிதனின் மானிடப் பிறவிதான்யாதினு மரிதரிது காண்" என்று மொழிந்தருளிய தாயினு மினிய தாவிலாச் சிருடைத் தாயுமானவ ரரும்பெரு வாக்கினுலும்,

புன்மர நெளிபுழுப் புள்வி லங்கெனும்
பன்மைய துயர்செயும் பவங்க டப்பியே
வ்ன்மைகொ ணிலமிசை மக்க ளாகுத
னன்மைகொ ளுயிர்க்கெலா மரிது நந்தியே.

573

என்று திருவாய் மலர்ந்தருளிய இறைமுத லுமத்தோ டியைதரும் விளக் கத்தோ டமைவுறப்பெற்ற சிவஞானத்தின் திருவடி வமைந்த சிவப்பிர காச சுவாமிகளின் திருவாக்காலும் யாவரும் தெள்ளிதி னுணரக் கிடக் கின்றதன்றே.

இத்தகை யருமைவாய்ந்த யாக்கை, நீர்க்குமிழியைப்போற் றோன்றி யுடன்மறைதலன்றி, இந்திரசாலம்போற் றோன்றிய பொழுதே இல்லை யாய் வேறுமாறுபோலவும், கனாக்காட்சிபோற் கடைபோதலின்றி இடையே யழியுமாறுபோலவும், கழுதிரதம்போ லொரு காரணங்காட்டி யழிவெய்துமாறுபோலவும் தோன்றி நிலைபெற் றொருவிதப் பயனையு மடையப்பெறு தழிவுறுமென்பது, "ஓரானந்தம் பெற் றுடனே யழியு முலகர்த்தம்மை" யென்பதனாலும், "என்று பொன்று மிவ்வுடன் முதலி யாவும்" என்பதனாலும்,

"பிறத்தலு மூத்தலும் பிணிப்பட் டிறங்கலு
மிறத்தலு முடைய நிடும்பைக் கொள்கல
மக்கள் யாக்கை யிதுவென வுணர்ந்து
மிக்க நல்லறம் விரும்புதல் புரிந்தேன்"

என்பதனாலும், "ஆடுங் கறங்கின் யோனிதொறு மலமந் தழுங்கிப் பிறந் திறந்து வீடுஞ் சிறியேன்" என்பதனாலும் தெள்ளிதி னுணரப்படும்.

அன்றியும்,

நாயினுக்கிரையோ நரியினுக்கிரையோ நகுநடைக் குழிவிழிப் பிறழ்பற் பேயினுக்கிரையோ கழுகினுக்கிரையோ பெரிதுநா றியபுழுக் குரம்பை யீயினுக்கிரையோ யாதினுக்கிரையோ யான்சுமந் தழன்றிடப் பணித்தாய் தாயினுக்கழகோ குழவியைவருத்தல் சாற்றிடா யிளசைவா னவனே.

என்றுணர்த்தியருளிய மாற்றுயர் செம்பொற் சிவஞான முற்றுமுண் டுமிழ்ந்த மாதவச் சிவஞான யோகிகளருட்பெருவாக்காலும், அளவிடற் கரிய பெருமைவாய்ந்த அறிவுடையோரா லியற்றியருளப்பெற்ற வரும் பெருங் காவியத்தாலும் தெள்ளிதி னுணரப்படுமன்றே. இவ்வருமை நிலைமையை வகிக்கப்பெற்ற யாக்கை, அழிதலில்லா வரும் பெரும் பேரின்பத்தை யடையவேண்டுவதே பெறுதற்கரிய பெரும்பயனும். அப் பயனை யமைவுறப் பெறவேண்டுமாயின், புண்ணியங்களுட் சிறந்ததாகிய சிவபுண்ணியத்தை யிடைவிடாது செய்துவரல் வேண்டும். அஃதாவது, சிவனடியார்களை விழியுறக் காணப்பெறின், அவர்களை வணங்கித் தமதில் லத்திற் கழைத்து முகமலர்ச்சியோடு அமுதூட்டி யுபசரிப்பதுவும், சிவ லிங்கப் பெருமானுக் கணிவித்தற் பொருட்டு நந்தவனம் வைத்தலும், பரமேசுவராலயத்திற்சென்று பணிவிடை முதலானவை செய்தலுமாம்.

574

துதிப்பதற்கு வாயமைத்தாய் சூழ்வதற்குத் தாளமைத்தாய்
மதிப்பதற்கு மனமமைத்தாய் வணங்குதற்குத் தலையமைத்தாய்
கதிப்பதற்கு நூலமைத்தாய் கடிக்குளத்தூ ரமர்ந்தறிவி
னுதித்தவுனக் கடியேங்க ளுதவுவதென் கைம்மாறே.

என்றபடி, தோற்றமு மழிவுமில்லாப் பெருந்தகைப் பரமனை வழி பட்டு வருபவர்கள் அழிவிலாப் பரமானந்த முத்தியை யடையப்பெற்றுப் பேரானந்த முறுவரென்பது திண்ணம்.

பீடுறு மானிடப் பிறப்பு வாய்த்துநல்
லேடவிழ் மலரினு லிறையைப் பூசியார்
பாடமை நாளெலாம் பாழ்க்கி றைப்பவர்
மூடரை யெண்ணுங்கால் மூந்தி நிற்பரே.

என்னுந் திருப்பாசுரத்தின்படி, பெருமைவாய்ந்த மானிட யாக்கையைப் பெற்றும் இதழ்கள் விரியப்பெற்ற பரிசுத்தமான மலர்களினுல் சிவபெரு மானைப் பூசிக்கப் பெறுதவர், பெருமைவாய்ந்த நாட்களை வீணுட்களாக வடையப்பெறுவதுமன்றி, மூடரைக் கணக்கிடும்போது முதன்மையை யடைவார்கள். ஆகையால்,

வீழ்நாள் படாஅமை நன்றூற்றி னஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்.

என்னுந் தெய்வப் புலமைத் திருவள்ளுவர் திருவாக்கின்படி, நாடோறுஞ் சிவபுண்ணியத்தைச் செய்வதோடு முக்காலங்களினு மிடைவிடாது பரமேசுரனைத் தரிசித்துப் பேரானந்தத்தை யடைந்துய்வோமாக. சுபம்.

I. L. திருஞானசம்பந்தன்
திருவாவடுதுறை மடாதீனம்.

இலக்கியப் பகுதி.

கலைமகள் தோத்திர மஞ்சரி.

சாசுவதியமீமை பஞ்சரத்தினம்.
(அக்டோபர் 231-வது பக்கத் தொடர்ச்சி.)

காளிதா சன்பாண கவிபீம கவிதண்டி
கட்டுரைப் பட்டு மூர்த்தி
கம்பனுயர் புகழேந்தி காளமே கஞ்சொற்
கனிந்தவொட் டக்கூத்தனென்.

575
575

ரூளிநே ராகுமிவ ரனைவரு முனைப்போற்றி
யன்ரேநன் மகிமை பெற்ரு
ரப்படித் தமியேனை யுந்தொண்டு கொண்டுகாத்
தருளவிது சமய மம்மே
வாளியோ டிச்சிதற வாளுறை புகக்கெண்டை
வாவிநீ ரூடொ ளிப்ப
மான்பிணை வனந்தோறு மறையப் பரந்துசெவ்
வரிபடரு நயன தருணீ
நாளிலோர் நாளுமற வாதுதொழு வாரிதய
நளினமே வியவண்ணமே
நாதசட் பதவேணி வேதபுத் தகபாணி
ஞானமுத் தமிழ் வாணியே. (3.)

சம்பந்த ரப்பர்சுந் தரரருண கிரியார்
தழைக்குநக் கீர தேவர்
சரதமா ணிக்கவா சகர்சிவப் பிரகாசர்
சார்ந்தசிவ ஞான மூர்த்தி
கும்பந்த மிக்கமுச் சங்கநன் னுவலர்
குலாவுபொய் யாமொழிமுதற்
கோதிலா வாணர்க ளெலோருநின் னருள்சிறிது
கூடியன் ரேவுயர்ந்தார்
வெம்பந்த பவாகித வீடுமுன் னுலலது
வேரெருவ ராலெய்துமோ
மெய்யான தெய்வநீ யாதலா லெனையிந்த
வேளையீ டேற்ற வேண்டும்
நம்பந்த முனிவர்மன தீபமே யெவ்வுலகு
நல்குபே ரின்ப வாழ்வே
நாதசட் பதவேணி வேதபுத் தகபாணி
ஞானமுத் தமிழ் வாணியே. (4.)

அகவிரு ளறப்பெற் றரும்பொரு ளனைத்தையு
மறிந்துநன் கிதுதீதிதென்
றநுதின மதித்துநித் யாநித்ய சாதன
மடைத்துவீ டடைவ தற்குத்
திகழுனக் கட்கருணை சிறிதேனு மின்றியெத்
தேவரா லுங்கூடுமோ

576

நிறமாக வென்வாக்கி னிற்குடி யிருந்துபல
சித்தியுந் தந்து காப்பாய்
சுகவிமல சிற்பாஞ் சோதியே பேரின்ப
சுத்தசை தன்ய வடிவே
சுமுகசந்த் ரோதய சுலட்சண சுமங்கலி
சுசீல சுந்தர சொரூப
நகபருவ சற்பூர குங்கும பரிமள
னயபயோ தராரத்னமே
நாதசட் பதவேணி வேதபுத் தக்பாணி
ஞானமுத் தமிழ் வாணியே. (5.)

(குறிப்பு.—இது மாம்பழக் கவிச்சிங்க நாவலர் பிரபந்தத் திரட்டிலிருந்து பெயர்த்தது. இதை நித்தியம் ஒதுவாருக்கு அத்தேவி வந்து நாவினில் வாசஞ்செய்வாளென்பது சத்தியம்.)

(இனி வேறு வரும்.)

வ. விநாயகர் தம்பிபத்தர்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

சாத்திரப் பகுதி.

குருபக்தி.

(தொடர்ச்சி.)

மூன்றுவது :—ஓர் நதியானது மலையிற் பிறந்து பல பாறைகளிற் பாய்ந்து, குகைகளிலும், மேடு பள்ளங்களிலும், சமபூமிகளிலும் பிரவகித்துச் சமுத்திரம் எங்கே எங்கே என்று தேடுவதுபோல் அதி வேகமாய் நாடிவர, சமுத்திரமும், தன்னைச் சரணமடையவரும் பக்தனுக்கு அபயமளிப்பதுபோல், அரை மைலுக்கு அப்பால் இருந்துகொண்டே "இதோ இங்குளேன். வருக வருக" என்று அலைகளாகிய கரங்கொண்டு கூவி அழைப்ப, ஆறும் நெருங்கவே, "குழந்தாய், நீ சிறுவன். இதற்குள் என்னை அடையத் தகுதியன்று; இன்னும் கொஞ்சம் இப்புவியில் வாழ்ந்து பின் நம்மை அடைவை" என்று சோதிப்பதுபோல் தன்னைக் கலக்கவந்த அவ்வாற்றை வலிய அலைகளால் ஒதுக்கித் தள்ள, அவ்வாறு "ஐயகோ! இக்கோழை யுலகத் துயரம் இனிப் பொறுக்கமாட்டேன்,

பாறைகளிலும் கல்லிலும் முள்ளிலும் அசுத்தங்களிலும் மிகுந்த கஸ்தி அடைந்துவிட்டேன், என் ஆண்டவனே! என்னை நீர் பரிசோதித்தால் தாங்குவேனே" என்று வேண்டுவதுபோல் அசைவற்றுத் தேங்கித் தும்பி அக்கரையில் நிற்க, சமுத்திரமும் பக்கிக் கிரங்கி, "ஆஞல் வருக" என்று அழைத்துத் தன் மயமாக (சமுத்திரமாக)வே செய்து கொள்வதுபோல, சீடர்களும் குருநாதர் எங்குக் கிடைப்பர் நாம் எப் பொழுது ஞானத்தை அடைவோம் என்று மிகுந்த உருக்கத்துடன் மலை, வனங்களிலும், ஸ்தலங்களிலும், குகைகளிலும் யாத்திரை செய்து தேடிக் கடைசியில் அதிருஷ்ட வசத்தால் சற்குருவும் நேர, சீடனின் பக்குவத்தைச் சிறிது பரிசோதித்து அவன் பக்கிக் கிரங்கி ஞானமார்க்கத் தைப் போதித்துத் தன் மயமாக்கிக்கொள்வர். இத்தகைய சீடர்கள் மத்தியமராவர். இவர்கள் சம்பந்தம் சங்கம நியாயமுடையது.

உதாரணமாக: ஸ்ரீமத் பாகவதத்தில் பாலகனான துருவன், தன் சிற்றன்னையால் நிந்தித்துத் தள்ளப்பட்டு, தன் அன்னையிடம் ஏகி "நான் கானகத்திற் சென்று அங்கே எனக்கு நேரக்கூடிய பெரியோர்களை அடுத்து அவர்களால் உபதேசாதிகள் பெற்று, ஸ்ரீமந் நாராயணனை நோக்கி அருந்தவ மியற்றி யாவர்க்கும் கிடைத்தற்கரிய பதம் பெறு வேன்" என்று சபதம் கூறி வனமேகக் குருவைத் தேட, இவன் பக்கிக் கிரங்கிய நாரத மஹரிஷி எதிர்சென்று சிறிது அவன் மனதைப் பரீ க்ஷித்து அவனுக்கு வேண்டிய உபதேசாதிகளைப் புரிந்தனர்.

(தொடரும்.)

M. V. சுப்ரமண்ய ஐயர்.

மானுஷ்ய ஜன்ம பரம புருஷார்த்தம்.

"அடியா ருறவு மான்பூசை நேசமு மன்புமன்றிப்
படிமீதில் வேறு பயனுள தோபங் கயன்வகுத்த
குடியான சுற்றமுந் தாரமும்வாழ்வுங் குயக்கலங்க
டடியா லடியுண்ட வாறெருக்கு மென்றினஞ் சார்ந்திலரே."

என்று வேதாந்த சித்தாந்த நூலுணர்ச்சியிலும் சொதபூதி நிலையிலுப் மேம்பட்டு விளங்கிய மகா ஞானியாகிய நமது பட்டினத்தடிகள் அருளிச் செய்திருக்கின்றார். ஒருவன் புருஷார்த்தத்தை யடைதற்கு (அதாவது) மோட்சத்தை யீடைதற்குச் சாதனமாயுள்ளது ஞானம். அந்த ஞானம்

S78

உண்மை உபதேசத்தான் எய்தற்பாலது. அவ்வுபதேசமோ ஒரு குருவின் திருவாக்கால் நிகழத்தக்கது. குருவோ, அவரவர் பக்குவ காலங்கண்டே எழுந்தருளிவந்து உபதேசஞ் செய்வர். ஆதலால் பரம புருஷார்த்தத்தை யடைய விரும்புகிற ஒருவனுக்கு முதற் கண்ணே பக்குவம் உண்டாக வேண்டிய தவசியமாம். எவ்விதத்திலாயினும் ஜீவகோடிகள் உய்யவேண்டு மென்ற பெருங் கருணைகொண்டு பரம கருணாநிதியாகிய முழுமுதற் கடவுள் அவரவர்கள் பக்குவத்திற்கியையப் பற்பலநெறி வகுத்திருப்பதை உற்று நோக்குதற்கு ஆற்றலின்றிச் சில வீணர்கள், ஆலயத்திற்குப் போவ தனா லென்ன பயன்? தீர்த்த ஸ்நானத்தினா லென்ன பயன்? என்று கருதித் தம்மட்டோடிராது, ஆலய தரிசனஞ் செய்பவர்களையும் தீர்த்த ஸ்நானஞ் செய்பவர்களையும் தல யாத்திரை செய்பவர்களையும் தடுக்கும் முயற்சியே ஆற்றுணாச் சுமையாகத் தலைக்கொண்டு திரிவது என்கருதி யோ அறியேம்! நமது சமயாசாரிய சுவாமிகளாகிய ஸ்ரீ ஞானசம்பந்த சுவாமிகள், வாகீசப்பெருமான், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மூர்த்தி தலம் தீர்த்தமாகிய மூன்றின் பெருமையை இவ்வுலகத்தார்க்கு நன்கு விளக்கு தற்கன்றோ தல யாத்திரைகள் செய்தார்களென்பது நன்கறிந்திலர் போலும்.

"மூர்த்திதலந் தீர்த்த முறையாய்த் தொடங்கினர்க்கோர் வார்த் தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே" என்று அருட்பெருஞ் செல்வராகிய நமது தாயுமானவரும் அருளிச்செய்திருக்கிறார்.

எம்போன்றவர்கள் பரம புருஷார்த்தத்தை யடையாமல் இது காறும் பிறந்திறந் தழல்வதற்கு ஏதுவாயிருப்பது பக்குவ மின்மையே யாம். உண்மை நாயன்மார் முதலானவர்கள் பரம புருஷார்த்தத்தை யடையத் துணைசெய்தது பக்குவமேயாம். அப் பக்குவம் புண்ணியத் தால் வரவேண்டும். புண்ணியமாவது நாம் கடவுளை வணங்கும் வணக்கத் தால் வரும் வினை நிகழ்ச்சியாம். கடவுள் வாக்கு மனுஷ்ய வஸ்துவா யினும் உயிர்கள் தம்மை வழிபட்டுய்ய நிமித்தம் மூர்த்தி தலம் தீர்த்தங் களிலே தம்முடைய திருவருளை விளங்கச்செய்து அவ்விடத்திலே தம்மை வழிபடுவோர்க்கு அருள் வழங்குகிறார்.

மோட்சமாகிய புருஷார்த்தத்தை யடைதற்கு மூர்த்தி மிக அவ சியமானது. மூர்த்தி என்றால் விக்கிரகம் (அல்லது) திருமேனி என்றர்த்தமாம் கடவுள், நாம் தம்மை வழிபட நிமித்தம் விக்கிரக முத லிய திருமேனிகளைத் தம்முடையவைகளாகக் கொள்ளுகிறார். அது எதுபோலவென்னில், அக்கினி நமக்கு உபகாரஞ் செய்யும்பொழுது விறகு, நிரி முதலியவற்றைப் பற்றி நின்று விளங்கி உபகரித்தல்போ

லென்க. அக்கினியின் உபகரிப்பை நாம் பெறவேண்டுமாஞல், அங்ஙனம் ஒரு இந்தனத்தைப் பற்றுத நிலையில் நாம் பெறுவதில்லை. அதுபோலவே சடவுள் இவ்வாறு ஒரு திருவுருவைக் கொள்ளாத நிலையில் நாம் அவரை வணங்குதல் இயலாது. ஆஞல் இவ் வியலாமை கடவுளின் பாலதன்று. கடவுள் எவ்வாறு நின்றும் அநுக்கிரகிக்க வல்லவரேயாம். அவர் அறிவில் நின்று உணர்த்துதலே ஏற்கும் வன்மையுடைய விஞ்ஞானகலர்க்கு அவ்வாறே அநுக்கிரகிக்கின்ருர். அவ் வன்மைபெறுத பிரளயாகலர்க்கு ஒரு திருமேனிகொண்டு முன்னின் றுணர்த்துகின்ருர். சகலர்களாகிய மும்மலமுடையவர்கட்கோ, குருலிங்க சங்கமங்களின் வாயிலாக அநுக்கிரகம் பண்ணுகின்ருர். ஆதலால் அவ்வவ் வேலாமை உயிர்களிடத்துள்ளதேயன்றிக் கடவுளின் பாலதன்று. கடவுள் நமது ஏலாமையை யுணர்ந்தே நமது சக்திக்கேற்ப இவ்வாறு விக்கிரகத் திருமேனியில் எழுந்தருளிநின்று அநுக்கிரகம் பண்ணுகின்ருர். அவர் அப்படி விக்கிரகத்தி லெழுந்தருளுதற்கு ஒரு முக்கிய நியாயமிருக்கிறது. அது யாதெனில், நம்முடைய அறிவு கண்ணிஞ்சிரியத்தைத் துணைகொண்டு அதன் வாயிலாகக் கண்டவற்றையே யறியும், அல்லாதவற்றை யறியமாட்டாது. அதனுல் அக்கண் ணிஞ்சிரியத்துக்கு விஷயமாகத்தக்க ஒரு வடிவில் அவர் தம்முடைய திருவருளே நிறுத்தி, அவ்வடிவைத் தமக்குத் திருமேனியாக ஏற்கிருர். நாம் அதை நம்முடைய சக்திக்கேற்பக் கண்ணினுற் றரிசித்துப் பேறுபெறுகின்ருேம். இதைத் தவிர நமக்குச் சிறந்த சாதகம் வேறில்லை.

ஆதலின், பரம புருஷார்த்தத்தை நமக்கு எளிதில் அளிக்க வல்ல தயாநிதியாகிய கடவுளே நாம் என்றென்றைக்கும் மறவாது மெய்யன்போடு வழிபட்டு, அவர் அருளிச்செய்த வேத சிவாகம வழியொழுகி, அவருடைய திருவருளைப் பெற்று அவராலே அநுக்கிரகிக்கப்படுகின்ற திருவடிப் பெரும்பேருகிய முத்தி நிலையை எய்துதல் இன்றியமையாத கடமையாகும்.

"நெருநலுளனொருவனின்றில்லை யென்னும்
பெருமையுடைத்திவ்வுலகு"

என்ருர் தெய்வப் புலவர். இதைச் சற்றுஉற்று நோக்குமிடத்து, மானுஷ்ய ஜன்ம பரம புருஷார்த்தத்தை யடைதற்கு விரைவில் முந்துவது ஆவசியகமும் அறிவுடைமையுமாம். சுபம்.

S. நடேச தேசிகர்,
தமிழ்ப் பண்டிதர், கோட்டுச்சேரி.

கலைமகள் கழகத்திற்கு ஓர் நன்கொடை.

புதுவைக் கலைமகள் கழகத்தின் கௌரவ அக்கிராசனாதிபதியும் கல்விக் கடலுமாகிய திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீ ஞானியார் மடாலயம் ஸ்ரீலஸ்ரீ சிவஷண்முக மெய்ஞ்ஞான சிவாசாரியசுவாமிகள், 1. சிவரகசியம், 2. தாயுமானவர்பாடல் மெய்கண்ட விருத்தியுரை, 3. சேக்கிழார் பிள்ளைத்தமிழ், 4. அத்துவித வேண்பா மூலமும் உரையும், 5. தேவோபாசனாதீபம், 6. ஸ்ரீ சீதா ராமாஞ்சனேய சம்வாத சாரசங்கிரகம் (தெலுங்கு), 7. வீரசைவ விளுவிடை இவ் வேழு புத்தகங்களையும் நமது கலைமகள் கழகத்தின் புத்தகசாலைக்கு நன்கொடை யளித்தருளினதுமன்றி, இன்னும் சில புத்தகங்கள் பின்னர்த் தருவதாகவும் வாக்களித் தருளினர்கள்.

சுவாமிகளுடைய கருணைத்திறம் எம்மனோர் இயம்பற் பாலதோ! கருணை நிரம்பிய சுவாமிகளால் முதல்முதல் புத்தக நன்கொடை யளிக்கப்பெற்ற நமது கழகம் இனி விரைவில் முன்னேற்றம் பெறுமென்பதிற் சிறிதும் ஐயமில்லை.

கருணைகூர்ந்து புத்தகங்கள் அருளிய நமது ஸ்ரீமத் ஞானியார் மடாலயத்துச் சுவாமிகளுக்கு, புதுவைக் கலைமகள் கழகத்தார் நன்றியறிந்த வந்தனம் சமர்ப்பிக்க என்றும் கடமைப்பட்டுள்ளார்கள்.

தி. திருப்புளிசாமி ஐயர்.

கழகத்தின் காரியதரிசி.

சமாசாரம்.

118-வது வயதில் இறந்தவர்.

காப்டன் டயமண்ட் என்ற ஒருவர் அமெரிக்காவிலுள்ள சான் பிரான்ஸிஸ்கோ நகரில் சிலதினங்களுக்கு முன் காலஞ்சென்றார். இவர் இறக்கும்பொழுது இவருக்கு வயது 118. இவர் தமது 106-வது வயது வரை சிறுவர்களுக்குத் தேகாப்பியாசத்தைப் போதித்துக்கொண்டிருந்தார். இவர் 67 வருஷகாலமாக மாமிச ஆகாரம் உட்கொள்ளவில்லையாம்.

கலியுகத்தின் காமதேனு.

கிருதயுகத்தில் காமதேனு எப்படி மனிதர்களின் இஷ்டத்தையெல்லாம் கொடுத்துக்கொண்டிருந்ததோ அவ்விதமாகவே கலியுகத்தில் நம்முடைய

மதனமஞ்சரி மாத்திரைகள்

மனிதர்களுடைய இஷ்டத்தையெல்லாம் கொடுக்கும் காமதேனு.

மதனமஞ்சரி மாத்திரைகளின் முக்கிய குணங்கள் இரத்தத்தையும் வீரியத்தையும் சுத்திசெய்து அவைகளை அதிகரிக்கச் செய்யும். ஞானதந்துவைச் சீர்திருத்தி நிலைநிறுத்தும். நீரோடாவது சொப்பனத்திலாவது இந்திரியம் ஒழுகுவதை நிறுத்தும். ஜீரணக்கருவிகளைச் சீர்திருத்திச் சுகமாய் மலத்தை நீங்கச் செய்யும். அகாலத்தில் கிழத்தன்மையை வாவொட்டாமல் தடுக்கும். இழந்துபோன ஞாபகசக்தியை மறுபடியும் கொடுக்கும். பாலியத்தில் புத்தியின்மைபால் செய்த தீய வழக்கங்களினால் உண்டான நடுஞ்சுகத்தை வேருடன் நீக்கி என்றைக்கு மழியாத புருஷத்தன்மையைக் கொடுக்கும்.

40 மாத்திரைகளடங்கிய டப்பி விலை ரூ 1-0-0

அடுத்துக்கெடுப்பது யார்?

மேகசம்பந்தமான வியாதிகள்தான். இவை தேகத்துக்குள் மறைந்துகொண்டு முகஸ்துதிசெய்து கெடுக்கும் ஜனங்களைப் போல் யாவர்க்கும் தெரியாமலே உம்மை அடியோடு நாசமாக்கும். ஆகையால் இதற்கு ஒரு சத்துருவைத் தேடுவது அவசியம். அச்சத்துருதான்

மேஹமர்த்தன சூரணம்.

இச் சூரணம் 3 நாள் உட்கொண்ட மாத்திரத்தில் மூத்திரம் விடும்போதுண்டாகும் எல்லா நோய்களும் நின்று மூத்திரம் முழுதும் தெளிவாகும். அது மிகு சிறிதுகால முபயோகிக்கையிலேயே 20 விதமான வேரூன்றிய வெள்ளைகூடத் திரும். எல்லா மேக வியாதிகளையும் அது நாசப்படுத்தும்.

10 தோலா அடங்கிய டப்பி விலை ரூ 1-0-0

ராஜ வைத்திய நாராயணஜீ கேசவஜீ,

177, சினபஜார் ரோட், மதரஸ்.

நீங்கள் கேட்டதுண்டா?

இதுவரை எந்த வைத்திய சாலைக்காவது பட்டணங்கள்தோறும், இதர தேசங்களிலும் ஷோஞ்சு (கேன்) ஆபீஸ்களும் ஏஜன்ஸிகளும் ஏற்பட்டு வியாபாரம் நடப்பதை நீங்கள் கேட்டதுண்டா? அப்பேர்ப்பட்ட பெரிய வைத்திய சாலையிலுள்ள ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள் எவ்வளவு பெருமைவாய்ந்ததாயிருக்கவேண்டும். இந்த மருந்தை நீங்கள் உபயோகித்தீர்களா? இல்லையெனில் எங்களுடைய புதிய காட்லாக்குக்கு எழுதுங்கள். விலையில்லாமலும், தபாற் செலவில்லாமலும் அனுப்பப்படும்.

வைத்திய சாஸ்திரி,
மணிசங்கர் கோவிந்தஜீ,
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
22, பிராட்வே, மதராஸ்.
96, மவுண்டுரோட், மதராஸ்.

ஏஜண்டு:—
நெல்லையப்ப முதலியார்,
சின்னகடைத்தெரு,
திருச்சினாப்பள்ளி.

Le Gérant S. Bangaroupathar